A1

3492
1563/21

ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
17 OCT 2022
...புரம்

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருப்பூர் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான இரவு காவலர் திரு.G.முருகன் என்பவரின் மகன் திரு.மு.உதயகுமார், இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ–7) துறை**

**அரசாணை (3ப) எண்.41** **நாள்: 20.07.2022.**
**பிலவ, சுபகிருது ஆடி 4,**
**திருவள்ளுவர் ஆண்டு 2053.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ந.க.எண்.2472/2021/வி2 நாள் 27.07.2021.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.13056/2022/டி2, நாள் 23.03.2022.

*****

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் இரவு காவலராக பணிபுரிந்து 06.06.2020 அன்று பணியிடை காலமான

திரு.டே.முருகன் என்பவரின் மகன் திரு.மு.உதயகுமார், என்பவருக்கு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையில் திருப்பூர் மாவட்டத்தில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 ஆக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அவர் 29.07.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால்; அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. மேலும், அவர் தனது கடிதத்தில், மறைந்த அரசு ஊழியரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை என தாராபுரம் வட்டாட்சியர் சான்றளித்துள்ளார் என்றும், அவரது மகன் திரு.மு.உதயகுமார், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 24.11.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 08.06.1994 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 25 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 26 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 27 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 ஆக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.மு.உதயகுமார், என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், இளநிலை உதவியாளர் பதவியில் 29.07.2021 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு தனியரின் பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 24.05.2022–ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.9184/ட்டி.1/2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.2498805/ஜி.1/2022–1, நாள்:23.06.2022–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை -18/20.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திருப்பூர் மாவட்டம்.

நகல்:
திரு.மு.உதயகுமார் இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, திருப்பூர் மாவட்டம்.
(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.